# சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கையும் அது எதிர்க்கொள்ளும் சவால்களும்: இரத்தொட்டை பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு

**A. Nithya**
South Eastern University of Srilanka
ananthnithya0103@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

மத்திய மாகாண மாத்தளை மாவட்டத்தில் இரத்தொட்டை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற ஒரு பயிர்ச்செய்கையாக இச் சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைக் காணப்படுகின்றது. கொக்கோ, கறுவா, மிளகு, கராம்பு போன்ற இன்னோரன்ன பயிர்கள் நாட்டப்படுகின்றன. இந்த பயிர்ச்செய்கை இன்று பல்வேறுபட்ட மானிடக்காரணிகளால், அதன் உற்பத்தியாளர்களால் கைவிடப்படக்கூடிய நிலையில், உற்பத்தி அருகி வருகின்றது. இதனால் இப்பயிர்களின் கேள்வி இன்று அதிகரித்து வருகின்றது. இப்பிரதேசத்தில் சிறு ஏற்றுமதி பயிர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காண்பதை பிரதான நோக்காகவும், அதனை ஓரளவேனும் குறைத்து இப்பயிர்ச் செய்கை பழைய நிலையை அடைவதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதையும், இப்பயிர்ச்செய்கை அருகி வருவதால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணலையும் துணை நோக்காக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவ்வாய்வின் முதல் நிலைத்தரவு சேகரிப்பு முறைகளாக நேர்க்காணல், கலந்துரையாடல், மற்றும் வினாக்கொத்துகளை பகிர்ந்தளித்தல் மூலமும், இரண்டாம் நிலைத் தரவுச் சேகரிப்பு முறைகளாக சிறு ஏற்றுமதி பயிர்செய்கை ஆராய்ச்சி நிலையத்தால் வழங்கப்பட்ட பதிவேடுகள், இணையம் ஆகியவற்றின் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இத்தரவுகளானது Microsoft Excel, Arc GIS 10.1 போன்ற கணனி மென் பொருட்கள் பயன்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன், இவ்வாய்வின் முடிவாக அருகி வரும் சிறு ஏற்றுமதி பயிர்களை இனங்கண்டு அருகிவருவதற்கான காரணிகளைக் கண்டறியக்கூடியதாக இருந்தது. மேலும் அக்காரணிகளை ஓரளவேனும் குறைத்து உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஆலோசணைகளை முன்வைக்க கூடியதாக இருந்தது.

***பிரதான சொற்பதங்கள்***: *ஆராய்ச்சிநிலையம், பயிருக்கான கேள்வி, விழிப்புணர்வு, உற்பத்தி*

## 1. அறிமுகம்


இன்று உலகில் பல்வேறுப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் பல்வேறு வழிமுறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அதில் இச்சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கையும் ஒன்றாகும். இப்பயிர்செய்கையில் கறுவா, கராம்பு, ஏலம், மிளகு, கொக்கோ, சாதிக்காய் போன்ற இன்னோரன்ன பயிர் வகைகள் பயிரிடப்படுகின்றன. இப்பயிர்செய்கை உலகலாவிய ரீதியில் பல்வேறுப்பட்ட சவால்களை எதிர்நோக்கி வருவது குறிப்பிடத்தக்கது். இதன்படி உலகலாவிய ரீதியில் இப்பயிர்களின் உற்பத்தி போக்கானது பல்வேறுபட்ட பௌதீக, மானிடக்காரணிகளால் வீழ்ச்சியடைந்து வருகின்றமை ஒரு பெரும் சவாலாக உள்ளது.

இலங்கையில் மொத்தமாக 1579.75 ஹெக்டயர் நிலப்பரபில் இப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. அதிலும் குறிப்பாக மாத்தளை மாவட்டத்தில் 100.95 ஹெக்டயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(Ministry of Minor Export Crops Poromotion, Performance Report 2013) இலங்கையின் பொருளாதாரத்தில் இச்சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கை ஒரு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்குவது எம்மால் அறிந்த ஒன்றே. இவ்வாறானதொரு நிலையில் இன்று இலங்கையிலும் இச்சிறு ஏற்றுமதி பயிர்களின் உற்பத்திப்போக்கானது தற்காலத்தில் வீழ்ச்சியடைந்துக்கொண்டு வருகின்றது. அதற்கு பல்வேறு

வகையான பௌதீக, மானிடக்காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றமை குறிப்பிடதக்கது. ஆகவே இக்காரணிகளை இனங்கண்டு அவற்றை களைவதன் மூலம் ஓரளவேனும் இப்பயிர்ச்செய்கையின் உற்பத்தியை அதிகரித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்காற்ற முடியும்.

## 2. ஆய்வு பிரதேசம்

குறித்த ஆய்வு பகுதியானது மாத்தளை மாவட்டத்தின் இரத்தொட்டை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசமாக உள்ளது. இப்பிரதேசத்தின் பரப்பானது 100,400401 சதுர கிலோ மீற்றராகவும்(An Environmental Profile Of The Matale District,2011), 52358 (Department of Census and Statistics, 2014) க்கு மேற்பட்ட மக்கள் தொகையையும் கொண்ட பிரதேசமாகும். இப்பகுதியின் வருடாந்த சராசரி வெப்பநிலையானது 25.2$C^0$, வருடாந்த சராசரி மழைவீழ்ச்சியானது 1922mm ஆகும்.(www.en.climate-data.org) இங்கு இக்காலநிலையிலேயே கொக்கோ, மிளகு, கறுவா, கராம்பு மற்றும் சாதிக்காய் போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இதன்படி கறுவா 1390 ஹெக்டயர், மிளகு 17 ஹெக்டயர், கொக்கோ 3793 ஹெக்டயர், கராம்பு 70 ஹெக்டயர் நிலப்பரப்பிலும் மேற்கொள்ளப்படுகின்றன.( An Environmental Profile Of The Matale District, 2011)




Retrieved by: The Researcher from Arc

## 3. ஆய்வுப் பிரச்சினை

இப்பயிர்ச் செய்கையானது இப்பிரதேசத்தில் காணப்படும் சமூக, பொருளாதாரக் காரணிகளினால் அருகி வருகின்றது. இதனால் இப்பயிருக்கான கேள்வி அதிகரிக்கின்றது.

## 4. ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வில் பிரதான நோக்கம், துணை நோக்கம் என இருவேறு நோக்கங்கள் காணப்படுகின்றன.

### 4.1 பிரதான நோக்கம்

- இப்பிரதேசத்தில் சிறு ஏற்றுமதி பயிர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காணல்

### 4.2 துணை நோக்கம்

- இப்பயிர்ச்செய்கை அருகி வருவதால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணல்
- ஏதிர் கொள்ளும் சவால்களை ஓரளவேனும் குறைத்து இப்பயிர்ச் செய்கை பழைய நிலையை அடைவதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.


## 5. ஆய்வு முறையியல்

ஒரு ஆய்வை மேற்கொள்வதற்கு தரவுகளும், தகவல்களும் இன்றியமையாதவை. தரவுகளும், தகவல்களும் சரியானதாகவும், முழுமையானதாகவும் இருக்கும் பட்சத்திலேயே முடிவுகள் சரியானதாக கிடைக்கப்பெறும். அந்த வகையில் இவ்வாய்விற்கான தரவானது இரு நிலைகளில் சேகரிக்கப்பட்டது. முதலாம் நிலை தரவு சேகரிப்பு முறைகளான கலந்துரையாடல், நேர்காணல், வினாக்கொத்துக்களை பகிர்ந்தளித்தல் மூலமும் சேகரிக்கப்பட்டது. இதன்படி குறித்த ஆய்வு களத்திற்கு சென்று இப்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் உற்பத்தியாளர்களிடம் (5) நேர்காணல் மூலமும், இப்பிரதேசத்தில் வாழும் மக்களிடம் கலந்துரையாடல் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டதோடு, வினாக்கொத்துக்களைப் (50) பகிர்ந்தளித்து தரவு சேகரிக்கப்பட்டது. இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பு முறைகளான இணையம், இதனோடு தொடர்புடைய புத்தகங்கள், ஆராய்ச்சி நிலையத்தால் வழங்கப்பட்ட பதிவேடுகள் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

மேலும் சேகரிக்கப்பட்ட தரவுகளானது MS Excel, MS Word, GIS 10.1 போன்ற கணனி மென் பொருட்களை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

## 6. பெறுபேறும் கலந்துரையாடலு

ஆரம்பக் காலங்களில் இரத்தொட்டை இப்பிரதேசதில் வாழும் மக்கள் இப் பயிர்ச்செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு தனது பொருளாதார பிரச்சினைகளை ஓரளவேனும் தீர்த்துக்கொண்டனர். ஆனால் இன்று இப்பயிர்ச்செய்கை அருகி வருவதற்கான காரணியாக இம்மக்களே இருக்கும் அதே நேரம் அதன் விளைவுகளையும் இவர்களே அனுபவிக்கின்றனர். மேலும் அப்பிரதேசத்தில் இப்பயிர்ச்செய்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளாக, முன்னர் அரச உடமையில் இருந்த காணிகள் இன்று தனியார் நிறுவனங்களுக்குச் செந்தமாகி வருகின்றன. இப்பயிருக்கான உத்தரவாத விலை கிடைப்பதில்லை, அத்தோடு இப்பிரதேசவாழ் மக்கள் தனது ஏனைய அபிவிருத்தி திட்ட நடவடிக்கை அதாவது குடியிருப்பு, பாதைகள், கட்டிடங்கள் போன்றவற்றை அமைப்பதற்காக இப்பயிர்ச்செய்கையை கைவிட்டு அக்காணியை இத் திட்டங்களுக்கு பயன்படுத்துகின்றனர். இதனால் இப்பயிர்களின் மரங்கள் வெட்டி அகற்றப்படுகின்றன. மேலும் இப்பயிருக்கான விளைநிலப்பரப்பு அருகி வருகின்றன.




Source: Questionnaire Survey 2016

மேல் காணும் வரைபானது குறித்த ஆய்வு பிரதேசத்தில் இப்பயிர்ச்செய்கை அருகி வருவதற்கான காரணிகளை வெளிகாட்டி நிற்கின்றது. இவற்றை வினாக்கொத்துக்களை பகிர்ந்தளித்தன் மூலம் அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. இங்கு அபிவிருத்தி திட்டங்களே (40%) அதிகப்படியான தாக்கத்தினையும் இளம் சமூதாய நாட்டமின்மை (5%) குறைந்தளவு தாக்கத்தினையும் செலுத்தியதோடு ஏனையக் காரணிகள் ஓரளவு தாக்கம் செலுத்தியுள்ளமையை அடையாளம் காணலாம்.

மேலும், இப்பயிர் அருகி வருவதற்கான காரணிகளாக வேறுப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் காணப்படுகின்றன. குறிப்பாக தேயிலை, வீட்டுத்தோட்டம் போன்ற நடவடிக்கையை குறிப்பிடலாம். இதற்கு பிரதான காரணமாக அமைவது இச்சிறு ஏற்றுமதி பயிருக்கான உத்தரவாத விலைக்கிடைக்காமையாகும். மேலும் இப்பகுதியில் வாழும் இளம் சந்ததியினர் இத்தொழிலில் ஈடுபட விருப்பமின்மையால் இதனை கைவிட்டு நகர பகுதிகளுக்கு வேலைக்காக இடம்பெயருகின்றனர். இதனால் இப்பிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான தொழிலாளர் வளமின்றி கைவிடப்படுகின்றது. ஆரம்பக்காலத்தில் காணப்பட்ட அதிகரித்த உற்பத்திக்கும் தற்போதுள்ள குறைந்த உற்பத்தியையும் காணும் உற்பத்தியாளர்கள் சோர்வடைந்து இதனைக் கைவிடுகின்றனர். இப்பயிருக்கு ஏற்படும் நோய்த் தாக்கமும் இப்பிர்செய்கை அருகி வருவதில் தாக்கத்தைச் செலுத்துகின்றது.

மேலும் இப்பயிர்செய்கை அருகி வருவதால் ஏற்படும் பாதிப்புக்களாக, இப்பிரதேசத்தின் பாரம்பரிய விவசாய முறை கைவிடப்படுவதோடு, இத்தொழிலுக்கே பழக்கப்பட்ட தொழிலாளர்கள் ஏனைய தொழிலில் ஈடுபடுவதற்கு பெரும் கஸ்டத்தை எதிர்நோக்குகின்றனர். மேலும், இப்பிர்ச்செய்யை தனது வாழ்வாதாரமாக நம்பி வாழ்ந்த மக்கள் பொருளாதார ரீதியான பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இப்பயிர்களின் தேவை அதிகரித்து காணப்படும் வேளையில் அதனை நிறைவு செய்து கொள்ள முடியாத நிலையை தோற்றுவித்துள்ளது.

## 7. முடிவுரையும் பரிந்துரைகளும்

இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து ஓரளவேனும் விடுபட்டு இச்சிறு ஏற்றுமதி பயிர்களின் தேவையை மக்கள் உணர்ந்து அதில் நாட்டத்தை அதிகரிப்பதற்கு இவ்வாய்வு பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்கின்றது. இப்பயிர்கள் நாட்டின் பொருளாதாரத்தில் எவ்வாறான தாக்கத்தை செலுத்துகின்றது என்பதை உணருவதற்கு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்க்கொள்ளுதல், அரசு இப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு மானியங்களை வழங்கி ஊக்குவித்தல், அரச நிறுவனங்களிலிருந்து தனியார் நிருவனங்களுக்கு கைமாறும் நிலைக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளுதல், இப்பயிருக்கான உத்தரவாத விலைத்திட்டம் ஒன்றை அரசு மக்களுக்கு பெற்றுக்கொடுத்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் இப்பிரதேசத்தில் மீளப்பெற்றுக்கொள்ள முடிவதோடு, இவ்வாறான செயற்த்திட்டங்களின் மூலம் ஓரளவேனும் இச்சிறு ஏற்றுமதி பயிர்களின் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளலாம். அத்தோடு, நாட்டின் பொருளாதாரத்தையும், மக்களின் வாழ்க்கை தரத்தையும் உயர்த்திக் கொள்ள முடியும்.

## 8. உசாத் துணைகள்


1. *"A contribution of minor export crops on rural economy in Sri Lanka", www.klh.ac.lk Accessed on 2016.09.26*
2. *"Department of export agriculture"*, www.exportagrdept.gov.lk *Accessed on 2016.09.29*
3. *"Extent under minor crops department of census and statistic"*, www.statistics.gov.lk *Accessed on 2016.10.15*
4. *"Ministry of minor export crops promotion"*, https://en.m.wikipedia.org *Accessed on 2016.19.20*
5. *"Ministry of minor export crop"s*, www.lankainformation.lk *Accessed on 2016.10.06*